ந.க.எண்.54025/திவ1/2/2022.

மருத்துவக் கல்வி இயக்ககம்,

சென்னை 10, நாள் 10/2/2023,

பொருள் திட்டமும் வளர்ச்சியும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவ தலைமை மருத்துவமனை உள்ளிட்ட அனைத்து மருத்துவமனை வளாகங்களில் பாலகம்/தேநீர் கடைகள்/ சிற்றுண்டி விடுதிகள் வைப்பதற்கு நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகள் விதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது தொடர்பாக.

பார்வை அரசாணை (நிலை) எண்.194, மருத்துவம் மக்கள் நல்வாழ்வு (எச்2) துறை, நாள் 21/8/2022.

//////////////

பார்வையில் கண்ட அரசாணையின் நகல் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. மேற்கண்ட அரசாணையில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சிற்றுண்டி விடுதி அமைத்திட அரசாணை எண்.194 மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் (எச்2) துறை நாள்21.06.2022 ஆகிய ஆணையிடப்பட்ட சரத்துகள் பின்பற்றி மருத்துவ நிலையத் தலைவர்கள். அவர்கள் அளவிலேயே ஆணைகள் வழங்கிட இதனுடன் அறிவுறுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள அரசாணை பத்தி 2ன் படி மருத்துவ நிலையத் தலைவர்கள் ஒப்பந்தப்புள்ளி பெற்று தமிழ்நாடு Tender Transperency Act 1998 Rules 2000 மற்றும் நடைமுறையிலுள்ள சட்ட விதிகளின்படி ஒப்பந்த புள்ளிகளை பெற்று அவைகளை Technical மற்றும் Financial bid உட்படுத்தி Comparative Statement ஏற்படுத்தி அதனடிப்படையில் ஒப்பந்த புள்ளிகளை அதாவது (பொதுப் பணித் துறையினரால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையை விட அதிகமாக கோரும் நபர்) இறுதி செய்து ஒப்புதல் மருத்துவ நிலையத் தலைவர்கள் அளவிலேயே ஆணைகளை வழங்கிட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும் இது தொடர்பாக மருத்துவக் கல்வி இயக்குநர்/துறை தலைவர் அவர்களின் ஒப்புதல் (Ratification) (பின்னேற்பாணை) பெற்று கொள்ளுமாறு மருத்துவ நிலையத் தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மருத்துவக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ)

பெறுநர்

இவ்வியக்கக கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து மருத்துவ நிலையத் தலைவர்கள்

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப் பணித் துறை, சென்னை 5.

இருப்பு கோப்பு

54025

**சுருக்கம்**

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை – மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனை உள்ளிட்ட அனைத்து மருத்துவமனை வளாகங்களில் பாலகம் / தேநீர் கடைகள் / சிற்றுண்டி விடுதிகள் வைப்பதற்கு நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகள் விதித்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (எச்2) துறை

**அரசாணை (நிலை) எண். 194**

**நாள்: 21.06.2022**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**
**சுபகிருது, ஆனி– 07**
**படிக்க:–**

கல்வி இயக்குநர் அ. தபால் பிரிவு 27 JUN 2022 சென்னை 10 கீழ்ப்பாக்கம்

1. அரசாணை (நிலை) எண்.2160, பொதுப்பணித் துறை, நாள் 03.11.1987.
2. அரசாணை (நிலை) எண்.59, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 20.03.2003.
3. அரசாணை (நிலை) எண்.93, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(எச்2) துறை, நாள் 25.03.2015.
4. சென்னை உயர்நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண் C.P.No.1786/2019, மீது பெறப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு, நாள் 25.11.2021.

------

**ஆணை:**

பார்வை மூன்றில் உள்ள அரசாணையில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகங்களில் சிற்றுண்டி விடுதிகள் இயங்குவதற்கு உரிய வழிமுறைகள் குறித்த கொள்கை முடிவு எடுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

2. சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அவமதிப்பு வழக்கு எண் C.P.No.1786, 2019 மீது சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினை செயல்படுத்தும் வகையிலும் அரசாணை (நிலை) எண். 93, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எச்2) துறை, நாள் 25.03.2015 குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றியும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மாவட்ட மருத்துவமனை உள்ளிட்ட அனைத்து மருத்துவமனைகளிலும் சிற்றுண்டி விடுதிகள் / தேநீர் விடுதி ஆகியவற்றை

22/6/22

நடத்துவதற்கான சம்மந்தப்பட்ட கல்லூரி முதல்வர் / இணை இயக்குநர் / மருத்துவ கண்காணிப்பாளர் ஆகியோரால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடைமுறையிலுள்ள சட்ட விதிகளின் படி ஒப்பந்த புள்ளிகள் இறுதி செய்து சம்பந்தப்பட்ட துறை தலைவர் (மருத்துவக் கல்வி இயக்குநர்/ மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர்) அவர்களின் ஒப்புதல் பெற்று கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி இறுதி செய்யபட வேண்டும் என ஆணையிடப்படுகிறது:-

i) அனைத்து அரசு மருத்துவ நிறுவன வளாகங்களிலும் உள்நோயாளி / புறநோயாளிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட சிற்றுண்டி மையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட வேண்டும்.

ii) வாடகை / குத்தகை தொகையினை பொதுப் பணித் துறையோடு கலந்தாலோசித்து முதல்வர் / மருத்துவ நிலைய தலைவர் நிர்ணயம் செய்ய வேண்டும்

iii) சிற்றுண்டி மையம் அமைக்க பொது மக்களிடமிருந்து ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு அந்த ஒப்பந்த புள்ளிகள் நடைமுறையிலுள்ள சட்டவிதிமுறைகளின்படி மருத்துவக் கல்லூரி முதல்வர் / இணை இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்ககம் / மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம் அவர்களால் இறுதி செய்யப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கோரும்போது Two Cover System (Technical bid மற்றும் Financial bid) 60 (Technical): 40 (Financial) என்ற அளவில் மதிப்பீடு மூலம் தரமான ஒப்பந்ததாரரை முடிவு செய்து சுகாதார முறையில் சிற்றுண்டி மையம் அமைக்க வேண்டும்.

iv) அனைத்து சிற்றுண்டி நிலையங்களுக்குமான ஒப்பந்த புள்ளி 3 வருட கால இடைவெளியில் கோரப்பட வேண்டும். அவ்வாறு கோரும் பட்சத்தில், தற்போது நடத்திக் கொண்டிருக்கும் பாலகம் / சிற்றுண்டிகளுக்கான ஒப்பந்த காலம் முடிவுறாத நிலையில், ஒப்பந்தக் காலம் முடிவதற்கு மூன்று மாதங்களுக்கு முன் ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்து ஒப்பந்தக் காலம் முடிவடைந்தவுடன், புதிய ஒப்பந்ததாரரை அனுமதிக்க வேண்டும்.

v) அரசு துறை நிறுவனங்களில், அத்துறைப் பணியாளர்களால் நேரடியாக நடத்தப்பட்டு வரும் சிற்றுண்டி நிலையங்கள் நீங்கலாக இதர இனங்களில் ஒப்பந்தப் புள்ளி கோரி இறுதி செய்ய வேண்டும். உதாரணமாக 'ஆவின்' நிறுவன சொந்த பணியாளர்களால் நடத்தப்படும் பாலகம் அல்லது அதுபோன்ற இதர அரசு நிறுவன கடைகள் அந்நிறுவன பணியாளர்களால் நடத்தப்படும் இனங்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி முறையிலிருந்து விலக்களிக்க வேண்டும்.

vi) அரசு துறைகளில் அதன் சொந்த ஊழியர்களால், நேரடியாக நடத்தப்பட்டு வரும் சிற்றுண்டி நிலையங்கள் நீங்கலாக அரசு மருத்துவமனைகளில் தற்போது இயங்கிவரும் இதர நபர்களால் / நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் அனைத்து சிற்றுண்டி நிலையங்களுக்கும் மேற்கூறிய முறை நடைமுறைப்படுத்த வேண்டும்.

vii) உணவகங்கள், உணவு பாதுக்காப்புத்துறை பதிவு / உரிமம் மற்றும் இதர அனுமதி சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து பெற வேண்டும்.

viii) குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் உணவகம் நடத்திய முன் அனுபவம் உள்ள நபர் / நிறுவனம் மட்டுமே ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க (FSSAI) பதிவு / உரிமத்தை சான்றாக பெற வேண்டும்.

ix) ஒப்பந்தப் புள்ளி பிரபலமான இரண்டு தமிழ் நாளிதழ்களில் கட்டாயம் விளம்பரம் செய்ய வேண்டும்.

x) மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ வளாகங்களில் நடத்தப்படும் தேநீர் கடை / பாலகம் / சிற்றுண்டி கடைகளின் சுகாதாரத்தைக் குறித்து மருத்துவக் கல்லூரி முதல்வர் / மருத்துவ நிலைய தலைவர் அவர்களால் அவ்வப்போது, அல்லது குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது ஆய்வு செய்யப்பட வேண்டும். அவ்வாறு ஆய்வு செய்து சுகாதாரமாகவும், தரமானதாகவும் உணவு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் நகலை துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

xi) சிற்றுண்டி விடுதிகள் சுத்தம் / சுகாதாரம் முறையாக பராமரிக்கப்படுவதோடு, குறைந்த விலையில் தரமான உணவு வழங்கப்பட வேண்டும். உணவு வகைகள் மற்றும் அவைகளின் விலைப்பட்டியல் அனைவருக்கும் தெரியும் வண்ணம் வைக்கப்பட வேண்டும்.

xii) மேற்கண்ட சிற்றுண்டி விடுதிகளில் ஏதேனும் சுகாதார கேடு ஏற்படுமாயின், இது குறித்து மருத்துவக் கல்லூரி முதல்வர் / சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகள் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சுகாதார / தரமான உணவு வழங்காத இனங்களில் நோட்டீஸ் வழங்கி 7 நாட்களுக்குள் சரி செய்திட உத்திரவிட வேண்டும். சரி செய்யா இனங்களில் குத்தகையை இரத்து செய்து மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டும்.

xiii) அரசு துறை நிறுவனங்கள் சொந்த பணியாளர்கள் நடத்தும் நிறுவனங்கள் தவிர இதர அனைத்து இனங்களிலும் ஒப்பந்தப் புள்ளிகள் மூலமே சிற்றுண்டி விடுதிகள் / தேநீர் விடுதிகள் / பாலகம் நடத்த அனுமதிக்க வேண்டும்.

xlv) தேவை எனில் மருத்துவர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கென மருத்துவக் கல்லூரிகளில் தனியாக சிற்றுண்டி மையம் மேற்கண்ட நிபந்தனைகளின்படி அமைக்கலாம்.

3. மேற்கண்ட ஆணைகளின் படி, உரிய முறைப்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, உரிய வழிமுறைகள் பின்பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் மற்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

மருத்துவக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை–600 010.
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை–600 006.
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், சென்னை–600 006.
அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்
(மருத்துவக் கல்வி இயக்குநர் மூலமாக).
அனைத்து இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நல இயக்ககம்
(மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மூலமாக).

**நகல்:-**

சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர்,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சென்னை–600 009.
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் (தகவு)துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

24.6.22
பிரிவு அலுவலர்.

பதிவஞ்சல் / ஒப்புதல் அட்டையுடன்

ந.க.எண்.1472/தி(ம)வ-1/2023,

முதல்வர் அலுவலகம்,
அரசு மருத்துவக் கல்லூரி,
நாமக்கல் - 637 003.
நாள்: 24 .04.2023.

பொருள் : திட்டம் மற்றும் வளர்ச்சி பிரிவு - நாமக்கல், அரசு மருத்துவக் கல்லூரி - **சிற்றுண்டியகம் (Cafeteria)** அமைத்தல் - ஏற்கப்பட்ட ஒப்பந்ததாரர் உரிய ஆவணங்கள் சமர்பிக்க வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை :

1) அரசாணை (நிலை) எண்.194, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(எச்2) துறை, நாள் 21.06.2022.
2) சென்னை, மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.54025/திவ1/2/2022, நாள் 29.06.2022, 10.02.2023, 27.02.2023.
3) இவ்வலுவலக ந.க.எண்.1472/தி(ம)வ-1/2022 நாள்: 21.09.2022, 02.02.2023.

******

நாமக்கல், அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள சிற்றுண்டியகம் (Cafeteria) செயல்பட பார்வை 1ல் காணும் அரசாணை (ம) பார்வை 2ல் காணும் மருத்துவக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் உள்ள வழிமுறைகளின்படி, பொதுப்பணித்துறை நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் தங்களது ஒப்பந்தப்படிவம் ஏற்கப்பட்டுள்ளது.

| வ. எண். | சிற்றுண்டியகம் அமைக்க வேண்டிய இடம் | நிர்ணயிக்கப்படும் மாத வாடகை தொகை (With GST) | வாடகை செலுத்த வேண்டிய கணக்கு எண் | பொதுப்பணித் துறையினர் நிர்ணயித்துள்ள இட அளவு |
|---|---|---|---|---|
| 01 | சிற்றுண்டியகம் (Cafeteria) | ரூ.59591/- | 0059-80-011-AA-23104 | 302.75 Sq.m |

ஒப்பந்தம் செய்ய கீழ்கண்ட ஆவணங்களை உடனடியாக மருத்துவக்கல்லூரி அலுவலகத்தில் சமர்பிக்கப்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. வாடகையிலிருந்து 5மடங்கு(ரூ.300000/-) தொகையை மூன்றாண்டுகளுக்கான முன்வைப்புத் தொகையை "முதல்வர் அரசு மருத்துவக்கல்லூரி நாமக்கல்" என்ற பெயரில் பிணைமுறிவு பத்திரம் எடுக்கப்பட வேண்டும்.
2. ரூ.100- க்கான பத்திரத்தில் ஒப்பந்த படிவத்தில் வழங்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளை கடைபிடிப்பேன் என சான்றளிக்க வேண்டும்.

**இணைப்பு:** நிபந்தனை விபரம்

24/4/2023
முதல்வர்

பெறுநர்

K. சிவக்குமார்,
72/106. சத்தியமூர்த்தி தெரு, சேலம்-636 001.

**நகல்:**

1. செயற்பொறியாளர், பொ.ப.து, (க&ப) நாமக்கல்.
2. உதவி பொறியாளர் பொ.ப.து, (க&ப) நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி.

**நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**
இயக்குநர், மருத்துவ கல்வி இயக்ககம், கீழ்பாக்கம், சென்னை-10.

## ஒப்பந்ததாரர் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் விபரம்

1. ஒவ்வொரு மாதமும் வாடகைத் தொகையை 5ம் தேதிக்குள் அரசு செலான் மூலம் செலுத்தி பொதுப்பணித்துறை அலுவலகத்திற்கும் அதன் நகலை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

2. சிற்றுண்டியகத்தின் மின்சார கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணத்தை உரிய ஒப்பந்ததாரர் ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் இவ்வலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

3. உணவகங்கள், உணவு பாதுகாப்புத்துறை பதிவு / உரிமம் மற்றும் இதர அனுமதி சம்பந்தப்பட்ட துறையிடம் பெறப்பட்டு சிற்றுண்டியகத்தில் பார்வையில் வைக்கப்பட வேண்டும்.

4. அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட புகையிலை,சிகரெட் போன்ற பொருட்களை விற்பனைசெய்தல் கூடாது.

5. சிற்றுண்டியகம் நடத்தும் இடத்தில் சேகரிக்கப்படும் குப்பை பொருட்கள் மற்றும் பிற கழிவுபொருட்களை உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

6. தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்த கூடாது. எக்காரணம் கொண்டும் ஒலி பெருக்கி மற்றும் ரேடியோ பயன்படுத்தக் கூடாது.

7. சிற்றுண்டியகத்தில் தீயணைப்பு கருவிகள் கட்டாயம் அமைக்கப்பட வேண்டும். அவைகள் முறையாக தீயணைப்பு துறையினரிடம் இருந்து அனுமதி பெற்று முறையாக ஆண்டு பராமரிப்பு கடைபிடிக்க வேண்டும்.

8. இம்மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வந்து செல்லும் மருத்துவர்கள்/பணியாளர்கள்/நோயாளிகள் மற்றும் பொது மக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் சிற்றுண்டியகத்தை நடத்தி கொள்ள வேண்டும்.

9. மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் நடத்தப்படும் சிற்றுண்டியகத்தில் சுகாதாரத்தை குறித்து மருத்துவக் கல்லூரி முதல்வர் கொண்ட குழுக்களால் அவ்வப்போது ஆய்வு நடத்தப்படும்.

10. உணவு சுகாதாரமாகவும் தரமானதாகவும் மற்றும் விலை குறைவாகவும் இருக்க வேண்டும். உணவு வகைகள் மற்றும் அவைகளின் விலைப்பட்டியல் அனைவருக்கும் தெரியும் வண்ணம் வைக்கப்பட வேண்டும்.

11. மேற்கண்ட சிற்றுண்டியகத்தில் ஏதேனும் சுகாதார கேடு ஏற்படுமாயின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்ய இம்மருத்துவக்கல்லூரி முதல்வருக்கு முழு அதிகாரம் உள்ளது.

12. உணவகத்தில் வீட்டு பிராணிகள் வளர்க்கக்கூடாது (Pet Animals)

13. சிற்றுண்டியகம் ஒப்பந்தம் எடுக்கும் ஒப்பந்ததாரர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தினைத் தவிர கூடுதலாக வேறு எந்த இடத்தையும் பயன்படுத்தக்கூடாது.

14. சிற்றுண்டியகத்தில் விற்கும் பொருட்களை மேஜையில் பரப்பி மற்றும் திறந்த நிலையில் வைத்தல் கூடாது.

15. ஒப்பந்தம் எடுக்கும் நபர் தான் சிற்றுண்டியகம் நடத்திட வேண்டும். வேறு நபர்களுக்கு உள்வாடகைக்கு விடக்கூடாது.

16. மூன்றாண்டு காலம் ஒப்பந்தம் முடிந்த பிறகு கட்டிடத்தை ஒப்படைக்குமாறே பழுதுகள் ஏதுமின்றி ஒப்படைக்க வேண்டும்.

முதல்வர்,
அரசு மருத்துவக் கல்லூரி, நாமக்கல்.

உ

தேதி: 12.06.2023

அனுப்புநர்: K. சிவக்குமார்
S/o. P. கந்தசாமி
166-72E, சத்தியமூர்த்தி தெரு
பிள்ளைகோயில் அருகில்
சேலம் - 636001.
Cell: 9842707755

அரசு மருத்துவக் கல்லூரி
13 JUN 2023
நாமக்கல் - 637 003

பெறுநர்: உயர்திரு முதல்வர்
நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி
நாமக்கல்

பொருள்: இந்நிறுவனம் நடத்துவது தொடர்பாக.

அய்யா அவர்களுக்கு,

தங்களின் தகவல் பெறும் ந.க.எண் 1472/தி(ம)அ-1/2023, நாள்: 24.04.2023 அதன் பெயர் அதில் குறிப்பிட்ட முன்னாள் சில ஆய்வகம் செய்து இந்நிறுவனம் நடத்த தேவையான அனைத்து சான்றிதழ்கள்
1) Union Bank. Bank Deposite. Rs. 3,00,000 மட்டும்
2) உடல்பயிற்சி பத்திரம். இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

நன்றி

இப்படிக்கு
K. Sivakumar
(K. SIVAKUMAR)
9842707755

भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

रु. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU 19-5-23.

CZ 254321 ₹100/-

முத்திரைத்தாள் விற்பனையாளர்
120-B, பிரட்ஸ் ரோடு,
சேலம்-1. தமிழ்நாடு.
உரிமை எண். 6206-3/91.

உ

## உடன்படிக்கை பத்திரம்

**19.05.2023**

2023ம் வருடம் மே மாதம் 19ம் தேதி, சேலம் மாவட்டம் , சேலம் டவுன், 72E 106, சத்தியமூர்த்தி தெரு, சேலம் – 636 001, என்ற முகவரியில் வசிக்கும் K.சிவக்குமார்–1, நாமக்கல் மாவட்டம், நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர்–2 ஆகிய தங்களுக்கு கீழ்காணும் நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளை பின்பற்றுவேன் என சம்மதிக்கிறேன்.

1. ஒவ்வொரு மாதமும் வாடகைத் தொகையை பிரதி மாதம் 5ம் தேதிக்குள் அரசு செலான் மூலம் செலுத்தி பொதுப்பணித்துறை அலுவலகத்திற்கும் அதன் நகலை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கிறேன்.

K. Sivakumar

2. சிற்றுண்டியகத்தின் மின்சார கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணத்தை ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் இவ்வலுவலகத்தில் செலுத்தி விடுகிறேன்.

3. உணவகங்கள், உணவு பாதுகாப்புத்துறை பதிவு / உரிமம் மற்றும் இதர அனுமதி சம்பந்தப்பட்ட துறையிடம் பெறப்பட்டு சிற்றுண்டியகத்தில் பார்வையில் வைக்கப்படும் என உறுதி செய்கிறேன்.

4. அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட புகையிலை, சிகரெட் போன்ற பொருட்களை விற்பனை செய்தல் கிடையாது என உறுதி செய்கிறேன்.

5. சிற்றுண்டியகம் நடத்தும் இடத்தில் சேகரிக்கப்படும் குப்பை பொருட்கள் மற்றும் பிற கழிவு பொருட்களை உடனடியாக அகற்றி சுகாதாரமாக வைத்துக் கொள்கிறேன்.

6. தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்த மாட்டோம் என்றும், எக்காரணம் கொண்டும் ஒலி பெருக்கி மற்றும் ரேடியோ பயன்படுத்துவது இல்லை என உறுதி அளிக்கிறேன்.

7. சிற்றுண்டியகத்தில் தீயணைப்பு கருவிகள் கட்டாயம் அமைக்கப்படும். அவைகள் முறையாக தீயணைப்பு துறையினரிடம் இருந்து அனுமதி பெற்று முறையாக ஆண்டு பராமரிப்பு கடைபிடிக்கபடும் என உறுதி செய்கிறேன்.

8. இம்மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வந்து செல்லும் மருத்துவர்கள் / பணியாளர்கள் / நோயாளிகள் மற்றும் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் சிற்றுண்டியகத்தை நடத்தி வருவேன் என உறுதி செய்கிறேன்.

K.Sivakumar

9. மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் நடத்தப்படும் சிற்றுண்டியகத்தில் சுகாதாரத்தை குறித்து மருத்துவக்கல்லூரி முதல்வர் கொண்ட குழுக்களால் அவ்வப்போது ஆய்வு நடத்த சம்மதிக்கிறேன்.

10. உணவு சுகாதாரமாகவும், தரமானதாகவும் மற்றும் விலை குறைவாகவும் இருக்கும். உணவு வகைகள் மற்றும் அவைகளின் விலைப்பட்டியல் அனைவருக்கும் தெரியும் வண்ணம் வைக்கப்படும்.

11. மேற்கண்ட சிற்றுண்டியகத்தில் ஏதேனும் சுகாதார கேடு ஏற்படுமாயின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்ய இம்மருத்துவக்கல்லூரி முதல்வருக்கு முழு அதிகாரம் உள்ளது என்பதை அறிவேன்.

12. உணவகத்தில் வீட்டு பிராணிகள் வளர்க்க மாட்டோம் என உறுதி அளிக்கிறேன். (Pet animals)

13. சிற்றுண்டியகம் ஒப்பந்தம் எடுக்கும் நான் எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தினைத் தவிர கூடுதலாக வேறு எந்த இடத்தையும் பயன்படுத்த மாட்டோம் என உறுதி கூறுகிறேன்.

14. சிற்றுண்டியகத்தில் விற்கும் பொருட்களை மேஜையில் பரப்பி மற்றும் திறந்த நிலையில் வைக்கமாட்டோம் என உறுதி அளிக்கிறேன்.

15. ஒப்பந்தம் எடுக்கும் நபராகிய நான் மட்டும் சிற்றுண்டியகம் நடத்துவேன் எனவும், வேறு நபர்களுக்கு உள்வாடகைக்கு விடமாட்டேன் என உறுதி கூறுகிறேன்.

16. மூன்றாண்டு காலம் ஒப்பந்தம் முடிந்த பிறகு கட்டிடத்தை ஒப்படைத்தவாறே பழுதுகள் ஏதுமின்றி ஒப்படைக்க சம்மதிக்கிறேன்.

தேதி : 19.05.2023

இடம் : Namakkal.

இப்படிக்கு,

K. Sivakumar

यूनियन बैंक ऑफ इंडिया Union Bank of India

भारत सरकार का उपक्रम A Government of India Undertaking

आन्ध्रा Andhra | कार्पोरेशन Corporation

SALEM-SHEVAPET

Print Sol: 00152

Mandate: SINGLY

शाखा Branch

Nominee Name: K SIVAKUMAR

ईएम / टीडीआर / झेड / क्र. EM / TDR / Z / No. 508331

तिथि / Date: 12-06-2023

12-06-2023

Received from MR SIVA KUMAR K से

For The Deen Govt Medical College, Namakkal.

प्रभावी तिथि Effective Date:

₹ Three Lakh only.

| | |
|---|---|
| खाता क्रमांक Account No. | 001523060000093 |
| ग्राहक आईडी Customer ID | 2030481964 |
| जमाराशि Deposit Amt. | 3,00,000.00 |
| अवधि Period | 3 Y 0 M 0 D |
| ब्याज दर % प्र.व. Interest % p.a. | 6.50 |
| देय तिथि Due Date | 12-06-2026 |
| परिपक्वता मूल्य* Maturity Value* | |
| प्रतिफल % प्र.व. Yield % p.a. | ***** |

*(केवल चक्रवृद्धि ब्याज योजना में लागू)

*(In case of compounding interest schemes only)

Under MONTHLY INCOME SCHEME-MIS

के अंतर्गत उक्त योजना पर लागू निबंधनों एवं शर्तों के अध्यधीन प्राप्त Dys

Subject to the terms and conditions applicable to the scheme.

UNION BANK OF INDIA ★ Shevapet, Salem-1

Upasana Geutham PF No. 655885

प्राधिकृत हस्ताक्षरी Authorised Signatory

Rama Rao.B PF No. 767944

प्राधिकृत हस्ताक्षरी Authorised Signatory

(कृ.पृ.उ. /P.T.O.)